# விருதுநகர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

மூ.மு.எண்.10161/அ1/ 2024 நாள்: 24\3.2025

பொருள்: பள்ளிக்கல்வி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம் - விருதுநகர் மாவட்டம் - விருதுநகர் கல்வி மாவட்டம் - பாலையம்பட்டி, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் இளநிலை உதவியாளர் திரு.விரகுநாதன் என்பாருக்கு இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை பெறப்பட்டது சார்பு செய்தல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை(நிலை) எண். 101, பள்ளிக்கல்வி வரவு செலவு திட்டம்-1) துறை, நாள்.18.05.2018.
2. அரசாணை(நிலை) எண். 151, பள்ளிக்கல்வி (SE1(1)1) துறை, நாள்.09.09.2022.
3. சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.07115/அ1/2023 நாள்.27.09.2023.
4. பாலையம்பட்டி, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரின் கடித ந.க.எண்.813/அ/2024 நாள்.24.10.2024.
5. சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ப.மு.எண்.7760/அ1/2024 நாள்.11.03.2025.

((((()))))

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் கல்வி மாவட்டம், பாலையம்பட்டி, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் இளநிலை உதவியாளர் திரு.விரகுநாதன் என்பார் பார்வை (3)இல் காணும் செயல்முறையின்படி (தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம்) இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை கோரப்பட்டதன்படி, பார்வை (5)இல் காணும் செயல்முறைகள் மூலம் தனியருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணை பெறப்பட்டுள்ளது.

பெறப்பட்ட அசல் பணிவரன்முறை ஆணை சார்ந்த பணியாளருக்கு சார்பு செய்யும் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது. மேலும் பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்திடவும் தெரிவிக்கலாகிறது.

இணைப்பு: 1. பார்வை (5)இல் காணும் அசல் பணிவரன்முறை ஆணை.
2. திரு.விரகுநாதன் என்பாரின் அசல் பணிப்பதிவேடு.

முதன்மைக் கல்வி அலுவலர்
விருதுநகர்.

நகல்: முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், பாலையம்பட்டி.

D:\A1\Probation & Regularization -A1 2024_unicode docx- 773 -

சிவகங்கை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு.அ.பாலுமுத்து. எம்.எஸ்ஸி.எம்.எட்.,

ப.மு.எண்.7760/அ1/2024 நாள். 11.03.2025

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக்கல்வித்துறை - இளநிலை உதவியாளர் நியமனம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 24/07/2022இல் நடைபெற்ற தொகுதி IV தேர்வில் தெரிவு செய்யப்பட்ட இளநிலை உதவியாளருக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை(நிலை) எண்.151 பள்ளிக்கல்வி (ப.க1) துறை நாள் 09/09/2022.
2. சென்னை-3, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் சுற்றறிக்கை எண்.453/PSD-B1/2022 நாள்: 26-07-2023.
3. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.56703/அ4/இ1/2023 நாள் 21/09/2023.
4. சிவகங்கை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.07115/அ1/2023 நாள் 27/09/2023.
5. விருதுநகர் மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரின் Reference No.TMR/G08/2024/805353237473.
6. விருதுநகர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.10161/அ1/2024 நாள் 14/10/2024.

********

ஆணை:

விருதுநகர் மாவட்டம், பாளையம்பட்டி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.வீ.ரகுநாதன் என்பாருக்கு பணிவரன்முறை செய்திட கோரும் கருத்துரு பார்வை (6)-இல் கண்டுள்ள விருதுநகர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது.

24/07/2022 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால், இளநிலை உதவியாளர் பதவிக்கு தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை (2)-இல் கண்டுள்ள செயல்முறை மூலம் பள்ளிக்கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (4)-இல் கண்டுள்ள செயல்முறையின்படி சிவகங்கை மாவட்டம், மேலநெட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு இளநிலை உதவியாளராக பணிநியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சார்ந்த பணியாளரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்று பார்வை (5)-ல் கண்டுள்ள செயல்முறை ஆணையின்படி உண்மைத்தன்மை வாய்ந்தது என சான்றளிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையிலும், பார்வை (6)-இல் கண்டுள்ள விருதுநகர் முதன்மைக்கல்வி அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையிலும், கீழ்க்கண்டுள்ள இளநிலை உதவியாளருக்கு அவர்து

பெயருக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் பணி நிபந்தனைச் சட்டம் 2016-ன் கீழ் உட்பிரிவு 28-ன்படி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் (திரு / திருமதி) | பதவி | பணிபுரியும் பள்ளி / அலுவலகம் | இளநிலை உதவயாளர் பணியிடத்தில் பணிவரன்முறைபடுத்தும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | விரகுநாதன் | இளநிலை உதவியாளர் | அரசு உயர்நிலைப்பள்ளி, மேலநெட்டூர், சிவகங்கை மாவட்டம் | 29/09/2023 மு.ப |

மேற்குறிப்பிட்ட இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்ட ஆண்டு / தர எண் அடிப்படையில் முன்னுரிமை அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணியின் பொதுவிதி 23-ன்படி மேற்குறிப்பிட்ட இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண்பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் மற்றும் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சி (பவானிசாகர்) தேர்வுகளில் தேர்சி பெற வேண்டும்.

இந்த பணிவரன்முறைபடுத்தப்பட்ட ஆணை பார்வை (2)ல் குறிப்பிட்டுள்ள தேர்வாணைய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கின் தீர்ப்பிற்கு உட்பட்டதாகும்.

இது குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

12.3.25

முதன்மைக்கல்வி அலுவலர்

சிவகங்கை

12/3/25

இணைப்பு - பணிப்பதிவேடு

பெறுநர்

1. சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய அலுவலர் வழியாக)
2. முதன்மைக்கல்வி அலுவலர், விருதுநகர்.